*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# சங்க இலக்கியத்தில் ஆண் குழந்தையின் முதன்மை

**முனைவர்.இரா.ஜீவாராணி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*சங்ககாலச் சமுதாயத்தில் குழந்தை பிறப்பு மிகவும் இன்றியமையானதாகக் கருதப்பட்டது. அச்சமுதாயம் ''மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே'' என என்னும் சமுதாயமாகவே அமைந்திருந்தது. இருப்பினும், பெண் மக்களைவிட ஆண் மக்களையே பெருமளவு விரும்பியுள்ளனர். ''புதல்வனே 'புத்' என்ற நரகத்திலிருந்து அவன் தந்தையைக் காப்பாற்ற வல்லவன். ஆகையால் அவன் 'புத்திரன்' எனப்பட்டான். 'த்ரா' (tra) என்ற சமஸ்கிருதச் சொல் பாதுகாத்தலைக் குறிக்கும்.'' என்பர். புதல்வன் என்று அழைப்பதற்குக் காரணம், '' 'புத்' என்னும் நரகக் குழியில் விழாதவாறு தம்மைப் பெற்றெடுத்த பெற்றோரைப் பாதுகாப்பதால்'' புதல்வன் என்று அழைக்கப் படுவதாகக் குறிப்பிடுவர். இதன் அடிப்படையிலேயே பெண் குழந்தையைக் காட்டிலும் ஆண் குழந்தையை மிகுதியும் விரும்பினர் என்பதனை உணர முடிகின்றது.*

**பெயரன் - புதல்வன்**

இல்லற வாழ்வில் மக்கட்பேறு சிறப்பு உடையது எனலாம். சங்க இலக்கியத்தில் மகன், புதல்வன், சிறாஅர், மகாஅர், குழவி, குழந்தை, சேய், போன்ற பலசொற்கள் புதல்வரைக் குறிக்கப் பயன்படுத்தப பட்டுள்ளன. இதன் வாயிலாகச் சங்ககாலத்தில் ஆண்குழந்தையே முதலிடம் பெறுவதனை அறியமுடிகிறது.

ஆண் குழந்தைகளை மட்டும் இன்னாரது பெயரன் என்று பெருமையாகக் கருதினர். இதனை,

''சிறந்தோன் பெயரன்'' **(நற்.40)**

''எந்தைப் பெயரன்'' **(கலி.81)**

என்ற அடிகளின் வாயிலாக இன்னாரின் பெயரன் என்று தான் சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டனரே தவிர பேத்தி என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அது மட்டுமின்றி புதல்வன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனவே தவிர புதல்வி, மகள் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.

''பொன் போல் புதல்வர் பெறாஅ தீரும்'' **(புறம். 9 : 4)**

''அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை'' **(புறம். 92 : 3)**

''முலைக் கோள் மறந்த புதல்வனொடு'' **(புறம். 211 : 21)**

''புகழ்சால் புதல்வன் பிறந்த பின்வா'' **(புறம். 222 : 3)**

''முனித்தலைப் புதல்வர் தந்தை'' **(புறம். 250 : 8)**

''புல் உளைக் குடுமிப் புதல்வன் தந்த'' **(புறம். 273 : 3)**

என்ற பாடல் அடிகளின் வாயிலாக புதல்வன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனவே தவிர புதல்வி, மகள் என்றும் குறிப்பிடப்படவில்லை.

**புதல்வரைப் பெறுதலின் உயர்வு**

புதல்வனைப் பெற்ற தாய் சிறப்பாகச் சுட்டப்படுகிறாள். தாயை விளித்துக் கூறும்

போது புதல்வனின் தாயே என்று பல இடங்களில் தாய் சுட்டப்படுகிறாள். மகள், புதல்வி இவர்களின் தாய் என்று சுட்டப்படவில்லை.

"வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்" **(புறம். 277 : 2)**

"முளரி மருங்கின் முதியோள் சிறுவன்" **(புறம். 278 : 2)**

மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் அடிகளின் வழி, புதல்வனின் தாய் என்று அழைப்பதில் பெருமை கண்டனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், அகநானூற்றிலும்,

"புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டிக்கு அன்றியும், எனக்கும்" **(அகம் - 184 : 2-3)**

என்று புதல்வனாற் பெருமை அடைவதை அறிய முடிகின்றது.

அது மட்டுமின்றி ஆண் குழந்தைகளைப் பெற்றவர்கள் மட்டுமே இவ்வுலகில் புகழோடும் மறுபிறவியிலும் வாழ்கின்ற பாக்கித்தையும் பெறுவர் என்ற நம்பிக்கை சங்க கால மக்களிடம் இருந்துள்ளது. இதனை,

"இம்மை உலகத்து இசையொடு விளங்கி
மறுமை உலகமும் மறு இன்று எய்துப
செறுநரும் வீழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்"
**(அகம்.66 : 1-4)**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், ஆண் குழந்தையைப் பெற்ற பெண்ணை மட்டுமே தனிச்சிறப்பு மிக்கவர்களாகக் கருதினர். இதனை,

"சிறுவர் தாயே பேரிற் பெண்டே"
**(புறம். 270 : 6)**

"செம்முது பெண்டிர் காதலஞ்சிறாஅன்" **(புறம். 276 : 3)**

"புதல்வன் ஈன்றெனப் பெயர்ப் பெயர்ந்து
அவ்வரி திதலை அல்குல் முதுபெண்டாகி" **(நற்.370 : 5-6)**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**குழந்தைக்குப் பெயர் சூட்டல்**

பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டலில் இரு வகை வேறுபாட்டு நிலைகள் காணப்படுகிறது.

ஆண்கள் தங்களின் முன்னோர் பெயரை மட்டுமே தன் குழந்தைக்குச் சூட்டியுள்ளனர். புதல்விக்கு இச்சிறப்பு இல்லை.

"முதல்வன் பெரும் பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த் ……………………" **(கலித். 75 : 23-24)**

"பெயரனை யாம் கொள்வேம் ….." **(கலித். 81 : 35)**

என்று போற்றப்பட்டதேயன்றித் தாய்க்கு அவ்வுரிமையோ பெருமையோ இருந்ததாகத் தெரியவில்லை.

**போரில் பங்கேற்றல்**

சங்ககால சமுதாயத்தில் ஆண் குழந்தை பெருமளவில் விரும்பப்பட்டதற்குக் காரணம், அச்சமுதாயம் ஒரு போர்க்காலச் சமுதாயமாக இருந்ததே எனலாம். ஏனெனில், போரில் ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும் என்ற காரணத்தினால் ஆண் குழந்தையின் பிறப்பு இன்றியமையாததாகக் கருதப்பட்டது எனலாம்.

"ஒளிறுவாளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" **(புறம். 312 : 5-6 )**

என்ற பாடல் அடிகளின் வழி, போரில் ஒளி விடும் வாளை வீசிப் போர் செய்து பகைவர் யானைகளை வீழ்த்தி வெற்றியுடன் வருவதுதான் காளைக்குக் கடமை என்பது புலனாகின்றது. ஆகவே போரில் பங்கேற்பதற்காகப் புதல்வரையே அவர்கள் விரும்பியுள்ளனர் எனலாம்.

**தென்புலத்தார்க்கு அருங்கடனிறுத்தல்**

தென்புல வாழ்நர்க்கு இறுதிக்கடன் செய்வதற்கு ஆண் பிள்ளைகள் வேண்டும். ஆதலால் அக்கடமையைச் செய்யும் ஆண் பிள்ளைகளைப் பெறாதவர்கள் போரில் அனுமதிக்கப்படவில்லை. இதனை,

"தென்புல வாழ்நர்க்கு அருங்கடனிறுக்கும்
பொன்போல் புதல்வர்ப்
பெறாஅதீரும்" **(புறம். 9 : 3-4)**

என்ற அடிகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. பதிற்றுப்பத்து,

"காவற்கமைந்த வரசு துறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை யிவணர்க்
கருங்கடனிறுத்த செருப்புகன்"
**(பதிற். 74 : 21-22)**

என்று குறிப்பிடுகிறது. இதில் "பெரியோரிடத்தே வணங்கிய மென்மையையும், பகைவர்க்கு வணங்காத ஆண்மையையும் உடைய புதல்வர்களைப் பெற்றதனால் உனது குலத்தில் உள்ள முன்னோர்களான தென்புலத்தாரைப் பாதுகாத்தாய்" என்று குறிப்பிடப்படுவதால்

இறந்தோர்க்கு இறுதிக் கடனிறுக்கும் நிலை பெண்களுக்கு அளிக்கப்படவில்லை என்பதனை அறிந்து கொள்ளமுடிகிறது. இதன் காரணமாகவும் ஆண் குழந்தை பிறப்பு விரும்பப்பட்டது என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**தொகுப்புரை**

1. இன்னாரின் பெயரன் என்று தான் சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டனரே தவிர பேத்தி என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அது மட்டுமின்றி புதல்வன் என்றே குறிப்பிடப் பட்டுள்ளனவே தவிர புதல்வி, மகள் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.
2. புதல்வனின் தாய் என்று அழைப்பதில் பெருமை கண்டனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.
3. புதல்வனைப் பெற்ற தாய் சிறப்பாகச் சுட்டப்படுகிறாள். தாயை விளித்துக் கூறும் போது புதல்வனின் தாயே என்று பல இடங்களில் தாய் சுட்டப்படுகிறாள். மகள், புதல்வி இவர்களின் தாய் என்று சுட்டப்படவில்லை.
4. ஆண் குழந்தைகளைப் பெற்றவர்கள் மட்டுமே இவ்வுலகில் புகழோடும் மறு பிறவியிலும் வாழ்கின்ற பாக்கித்தையும் பெறுவர் என்ற நம்பிக்கை சங்க கால மக்களிடம் இருந்துள்ளது.
5. ஆண்கள் தங்களின் முன்னோர் பெயரை மட்டுமே தன் குழந்தைக்குச் சூட்டியுள்ளனர். புதல்விக்கு இச்சிறப்பு இல்லை.
6. போரில் ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும் என்ற காரணத்தினால் ஆண் குழந்தையின் பிறப்பு இன்றியமையாததாகக் கருதப்பட்டது.
7. தென்புல வாழ்நர்க்கு இறுதிக்கடன் செய்வதற்கு ஆண் பிள்ளைகள் வேண்டும். ஆதலால் அக்கடமையைச் செய்யும் ஆண் பிள்ளைகளைப் பெறாதவர்கள் போரில் அனுமதிக்கப்படவில்லை.